### மதுரை தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை அமைந்துள்ள

# 1.3 கி.மீ. - பாலத்திற்கு - ‘நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்’ பெயர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயர் சூட்டி பெருமிதம்! 21–ஆம் தேதி திறந்து வைக்கிறார்!

சென்னை, பிப்.18-

மதுரை தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு “நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்” எனப் பெயர் சூட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**நீண்ட பாலங்களை அமைத்துச் சாதனை படைத்துவரும் நமது திராவிட மாடல்இல், அடுத்து மதுரையில் அமைகிறது 1.3 கிலோமீட்டர் நீளமுள்ள “நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்”! தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு, இந்திய நாட்டின் விடுதலை க்காகத் தனக்கெனப் பாதையை உருவாக்கி, நம் தென்மாவட்ட மக்களை விடுதலைப் போரில் ஈடுபடுத்திய வீரத்தின் அடையாளமான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பெயரைச் சூட்டிப் பெருமிதம் கொள்கிறேன். ரூ.213 கோடியில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலத்தை வரும் 21ஆம் நாள் என்னுடைய மதுரைப் பயணத்தில் திறந்து வைக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட் டுள்ளார்.

### மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட

# 2025-2026ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, பிப்.18-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2026) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 2025-2026ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டார்.**

தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2025-26, கடந்த ஐந்து ஆண்டிற்கான மாநிலத்தின் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் பாதையை எடுத்துரைக்கிறது. இவ்வறிக்கை 10 அத்தியாயங்களில் பொரு ளாதாரத்தின் பல்வேறு முக்கிய அம்சங்கள் மற்றும் அவை எவ்வாறு செயல்பட்டது என்பதை விரிவாக விளக்குகிறது.

இவ்வறிக்கையானது, நம் மாநிலத்தின் பொருளாதார செயல்பாடுகளை விளக்குவதுடன், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு இணையான தனிநபர் வருமானம் ஆகிய இரு இலக்குகளையும் அடைய கவனிக்க வேண்டிய பகுதிகளையும் சுட்டிக்காட்டுகிறது.

இந்த தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை, கொள்கை வகுப்பாளர்கள், வணிகம், தொழில்வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு முக்கியமான தகவல்களை வழங்குகிறது. பொருளாதார போக்குகளை ஆவணப்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டின் எதிர்கால மேம்பாட்டு உத்திகளை வடிவமைப்பதற்கும், சான்றுகள் அடிப்படையிலான கொள்கை முடிவுகளை வலுப்படுத்துவதற்கும் முக்கியமான கருவியாக செயல்படும்.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் அரசு செயலாளர் / மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு கூ பொ) சஜ்ஜன் சிங் ரா சவான், மற்றும் நிதித்துறை துணை செயலாளர் சி.ஏ. ரிஷப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அதுதான்!

**சி**ங்கத்து
நடையாக

சீரிளமைத்
தமிழாக

போரேந்தும்
வாளாக

பொங்கு
தமிழர்
வாழ்வாக

முத்தமிழின்
வித்தாக

மூவேந்தர்
கெத்தாக

கன்னித்தமிழ்
பூமிக்கு

காலம் நல்கிய
கம்பீரச் சொத்தாக..

உச்சரிக்கும் போதே

எளிய
மக்களுக்கு

உமிழ் நீரும்
இனிக்கிறது

அதுவே

எதிரிகளின்
உறக்கத்தைக்
கெடுத்து

உதறலைக்
கொடுக்கிறது
என்றால்

அது தான்..

முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்

**என்ன நாஞ் சொல்றது..**





**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (19.2.2026 வியாழக்கிழமை) காலை 10.30 மணி அளவில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது (நன்னியூர் இராஜேந்திரன்) தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட, - செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் – துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, பவானி கே.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில நெசவாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;
2. சட்டப்பேரவைத் தேர்தலில் நமது அணியின் கோரிக்கைகள்
3. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள்
4. கழக ஆக்கப் பணிகள்

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.02.2026

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தொகுதி வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறைக் கூட்டம்!



## மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!

தமிழ்நாட்டுப் பெண்களை உலகளவில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்களாக’ மாற்றியுள்ள கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி, மேட்டூர், சங்ககிரி ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும், திராவிட மாடல் 2.0 கழக ஆட்சி அமைந்திடும் வகையில், வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாக மகளிர் பரப்புரை மேற்கொள்ள பயிற்சி பாசறை கூட்டம் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

| தொகுதி | தேதி / நேரம் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| எடப்பாடி தொகுதி | 18.02.2026 புதன்கிழமை | காலை 9.00 | ஸ்ரீ கிருஷ்ண மஹால், சித்தூர் |
| மேட்டூர் தொகுதி | 18.02.2026 புதன்கிழமை | மதியம் 02.30 | J.K.B. மஹால் கருமலைகூடல் |
| சங்ககிரி தொகுதி | 19.02.2026 வியாழக்கிழமை | காலை 9.00 | R.K.S. மஹால், குப்பனூர் சங்ககிரி |

அதுசமயம் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்க்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அந்நதந்த தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் நியமிக்கப்பட்டுள்ள பாக மகளிர் பொறுப்பாளர் ஒருவர் வீதம் அனைத்து வாக்கு சாவடிகளிலும் இருந்தும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

### சென்னை செயிண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் –

# மாபெரும் தமிழ்க் கனவு - அமைச்சர் கோவி.செழியன் தலைமையுரை!

## எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்!

*சென்னை, பிப். 18 -*

*சென்னை செயிண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் மாபெரும் தமிழ்க் கனவு 200 ஆம் நிகழ்வு இன்று 18.02.2026- புதன்) காலை 9 மணியளவில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ரேஷ்மி சத்தார்த் ஜகடே, திட்ட விளக்கம் மற்றும் நோக்கவுரையாற்றுகிறார். உயர் கல்வித் துறை அரசுச் செயலாளர் பொ.சங்கர் வரவேற்புரையாற்றுகிறார்.*

*இந்நிகழ்வில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையுரை யாற்றுகிறார்.*

*எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி ‘மாபெரும் சபைதனில்’ எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்.*

*கல்லூரிக் கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி நன்றி கூறுகிறார்.*

### பெரம்பலூர் மாவட்டத்தில் அரசுப்பள்ளி

# மாணவ-மாணவிகளை மாவட்டத்தின் முக்கியப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லும் கல்விச்சுற்றுலா!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளினி பங்கேற்பு!

*பெரம்பலூர்,பிப்.18-*

*பள்ளிக்கல்வித்துறையின் மூலம் மாதந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவருடன் மாணவர்கள் கலந்துரையாடும் COFFEE WITH COLLECTOR என்ற நிகழ்வு நடத்தப்படுகின்றது. கடந்த 13.01.2026 அன்று நடைபெற்ற COFFEE WITH COLLECTOR நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்துரையாடிய அரசுப்பள்ளி மாணவ, மாணவிகள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச்சிறப்பு மிக்க இடங்கள் மற்றும் சுற்றுலா தலங்களை சுற்றிப் பார்க்க ஆசையாக உள்ளதாக தெரிவித்தனர்.*

*மாணவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் கல்மரப்பூங்கா, காரை புதைபடிவ பூங்கா, பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அம்மோனைட்ஸ் மையம், அரியலூர் மாவட்டம் வாரணவாசியில் உள்ள அருங்காட்சியகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை இணைக்கும் வகையில் செல்லக்கூடிய ஒரு நாள் கல்விச்சுற்றுலா நடத்த திட்டமிடப்பட்டது.*

*அதனடிப்படையில், இன்று முதற்கட்டமாக மேலமாத்தூர், அசூர், ஒதியம் மற்றும் குன்னம் ஆண்கள், பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு பயிலக்கூடிய 125 மாணவர்கள், 107 மாணவிகள் என மொத்தம் 232 மாணவ மாணவிகளை ஒரு நாள் கல்விச்சுற்றுலாவிற்கு அழைத்துச்செல்லும் பேருந்துகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி, மேலமாத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் 06.02.2026 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*

*அதன்பின்னர், சாத்தனூர் கல்மரப்பூங்காவில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் அரியலூர் மாவட்டங்களில் உள்ள தொல்லியல் சார்ந்த சிறப்புகளையும், முதலமைச்சர் அவர்கள் உத்தரவால் காரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதைபடிவ பூங்கா மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள அம்மோனைட்ஸ் அருங்காட்சியங்களின் முக்கியத்துவத்தை மாணவர்களிடையே விளக்கினார்.*

*பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தொல்லுயிர்களின் படிமங்களின் நமது பெரம்பலூர் அரியலூர் மாவட்டங்களில் கிடைப்பது குறித்து உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆய்வாளர்கள் ஆர்வமுடன் வந்து பார்வையிடுகின்றனர். நமது மண்ணின் முக்கியத்துவத்தை, வரலாற்றுத்தொன்மைகளை மாணவச் செல்வங்களாகிய நீங்களும் அறிந்துகொள்ள வேண்டும் என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.*


*பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கல்மரப்பூங்காவில் உள்ள அருங்காட்சியகத்தினையும், கல்மரத்தையும் மாணவ, மாணவிகளுடன் பார்வையிட்டார். மேலும், சிவசங்கர் அறக்கட்டளை மூலம் மாணவ, மாணவிகளுக்கான குறிப்பேடு, பேனா, அந்தந்த பகுதிகள் குறித்த விளக்க துண்டு பிரசுரங்கள், மதிய உணவு உள்ளிட்டவை மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இது போன்ற அடுத்தடுத்து மற்ற பள்ளிகளுக்கும் ஒரு நாள் கல்வி சுற்றுலா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது,*

*இந்நிகழ்ச்சியில் தொல்லியல் வரலாற்று ஆய்வாளர் பிரசாத், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் தொல்லுயிர் படிமங்கள் கிடைக்கும் பகுதிகள் குறித்தும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் மாணவ மாணவிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.*

*இதில், ஆலத்தூர் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, முதன்மைக்கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், ஆலத்தூர் வட்டாட்சியர் முத்துக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்குடி மதியழகன்
**பிப்ரவரி 18 (1974)**



**கழகம் துவங்கப்பட்ட போதே உறுப்பினராகியதுடன், 1950களில் அயல்நாடான பர்மாவில் கழகத்தை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**தமிழகம் திரும்பிய பின்னர், 1960களில் இராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும் – முதுகுளத்தூர் வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**முதுகுளத்தூர் ஒன்றிய பெருந்தலைவராகவும் – மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராகவும், முதுகுளத்தூர் நிலவள வங்கி தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மதுரை மத்திய சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**